திருமந்திரம்

கடவுள் வாழ்த்து - எளிய உரை

ஆ.சி. முருகவேள்

உ

சிவமயம்

திருமூலர் அருளிச்செய்த

திருமந்திரம்

கடவுள் வாழ்த்து—எளிய உரை

அன்பளிப்பு :

தஞ்சாவூர்

நடராஜ பிள்ளை உலகநாதன் M.A.B.T

திருவாவடுதுறை ஆதீனப்புலவர்

பேராசிரியர் ஆ. தி. முருகவேள் எம்.ஏ.

இயக்குநர், 'நமச்சிவாய' சைவ சித்தாந்த அஞ்சல்வழிக் கல்வி

ஆசிரியர், 'சிவநெறி' - திங்கள் மலர்

'தமிழ்த்தேவகம்' தமிழ் சமயப் பணிநிறுவனம்,

காந்திமதி நிலையம், 34—காசாமலை,

திருச்சிராப்பள்ளி-620 023

வெளியீடு எண் : 7

முதற்பதிப்பு : *திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை*
(நவம்பர் 1991)

விலை ரூ 3

அச்சுப்பணி : மெய்கண்டார் அச்சகம்
காந்திமதி நிலையம்
34-காசாமலை, திருச்சிராப்பள்ளி, 620 023
(தமிழ் நாடு - இந்தியா)

சிவமயம்

முகவுரை

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நான்அறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் று ஏத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

தமிழ் மூவாயிரம் என்றும் திருமந்திர மாலை என்றும் விளங்கி வருவது திருமூலர் அருளிச் செய்த செந்தமிழ்த் திரு முறையாகும். திருமந்திரம் என்று சொல்லும் அளவில் இன்று உலகத்தவர் நினைவில் வருவது இத் திருநூலே,

சைவத் திருமுறைகளில் ஒன்றான இத் திருமந்திர நூலைக் கற்றறியும் அவள் அன்று உலக நாடுகள் அனைத் திலும் பரவியுள்ளது. சமய வேறுபாடு கருதாமல் எல்லாச் சமயத்தாராலும் விரும்பிக் கற்கப்படுகிறது இந்நூல்.

இந்நூலுக்குப் பொருள் அறிவதோ, உரை காண்பதோ அவ்வளவு எளிதன்று. நூலறிந்த சான்றோர் பலர் இதற்கு உரை செய்துள்ளனர். இந்நூற் பாடல்கள் பலவற்றிற்கு இது தான் பொருள் என எவரும் துணிந்துரைக்க இயலாது. ஆனாலும் பொருள் காண முயன்றனர் பலர்.

அனுபவம் இல்லாத, விரிவிலா அறிவினன் ஆகிய யானும் திருமந்திரத்திற்கு உரை எழுதத் துணிந்தேன். 'இளங்கன்று பயம் அறியாது' என்ற பழமொழிக்குச் சான்றாக நிற்கும் தகுதியுடையேன். பொருளறியும் எனது முயற்சியை ஆன்றோர் பலரும் காண்பர், அறிவுறுத்துவர். அதனால் எனது அறிவிலும் விளக்கம் உருவாகலாம் என்ற எண்ணத் தின் விளைவு இது.

எமது தமிழ்த் தேவகம் தமிழ் சமயப் பணிமன்றத்தின் திங்கள் வெளியீடாக வரும் 'சிவநெறி' மலரின் தொடர்ந்து எழுதி வரும் திருமந்திரம் எளிய உரைப் பகுதியில் பாயிரம் -கடவுள் வாழ்த்துப் பகுதியின் உரைத் தொகுப்பினை மட்டும் இச்சிறு நூல்வடிவில் வெளிப்படுத்தியுள்ளேன். அன்பர், ஆன்றோர் திருநோக்கிற்கு வைக்கின்றேன். நெறிப்படுத்தப் பணிந்து வேண்டுகின்றேன்.

இது திருமந்திரம்-எளிய உரையின் முதற் பகுதி. பிற பகுதிகளும் தொடர்ந்து வரும்.

நன்றி.

திருமூல தேவர் திருவடி வெல்க!

அன்பன்
ஆதி. முருகவேள்

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருமந்திரம்

எளிய உரையுடன்

காப்பு

சொல்லப்போவது திருமந்திர மாலை. இது சைவ ஆகமங்களில் உணர்த்தப்படும் பொருள்களைத் தொகுத்துக் கூறும் நூல். இந்த நூல் இடையூறு எதுவும் இல்லாமல் இனிதாக முடியவேண்டும். அதற்காக இடையூறு வராது தடுத்தருளும் மூத்த பிள்ளையாரைப் போற்றி வணங்குவேன்.

மூத்த பிள்ளை ஐந்து கைகளை உடையவன். யானையின் முகத்தைப் போலப் பெரிய முகத்தை உடையவன். திங்களின் இளைய பிறை போன்ற கொம்பினை உடையவன். நந்தி' என்னும் திருப்பெயரை உடைய சிவபெருமானுக்கு மூத்த மகனாயிருப்பவன். சிவஞானத்தின் தளிரானவன்.

இப்படிப்பட்ட திருமேனியும் சிறப்பியல்பும் உடைய மூத்த பிள்ளையை எனது புத்தியில் எழுந்தருளச் செய்கின்றேன். அங்கு அவன் திருவருளைப் போற்றுகின்றேன்.

சிந்தனைப் பொருள்

உயிர்களின் நன்மைக்காகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து தொழில்களைச் செய்துவருபவன்.

படைப்புக்கு உள்ளான உயிர்கள் நுகர்ந்துவரும் நனவு கனவு உறக்கம் பேருறக்கம் உயிர்ப்படக்கம் என்னும் ஐவகை நுகர்ச்சிவழியிலும் உடனிருந்து நுகரச் செய்து வருபவன். அந்த ஐவகை நுகர்ச்சிதோறும், உயிர்ப்பகையான ஆணவ மல இருளின் வலிமை படிப்படியாகக் கெடுமாறு செய்து அதற்கு ஒத்தபடி அறிவினை விளங்கச் செய்துவரும் திருவருளும் நூலறிவுமான இருவகை அறிவாண்மையை உடையவன்.

எக்காலத்தும் எவ்விடத்தும் எல்லை இல்லாது பரந்து பெருகிநிற்கும் பேரறிவாகிய பெருமான் முதலாவது தோற்றமான ஓசையும் ஒளியுமாகிய 'ஒரு வார்த்தை' எனப்படும் ஓங்கார உருவினன். அந்த ஒருவார்த்தையின் உட்பொருளாய் விளங்கும் சிவஞானத்தின் தோற்றமானவன்.

இத்தகையோனை எனது தெளிவுறும் சிந்தையினிடத்துத் திகழ்வரக் காண்பேன். கண்டு என் இச்சை அறிவு செயல் அனைத்தையும் அவன் அருளுக்கு அடைக்கலம் ஆக்கி நிற்பேன். இதனால் இத்திருமந்திர மாலையும் இடையூறு இன்றி இனிதாகி நிரம்பும்.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்து அடி போற்றுகின் றேனே.

நூல்

சிறப்புப் பாயிரம்

கடவுள் வாழ்த்து

1. நூல்களால் அவன் என்று உணர்த்தப்படும் ஒருவனே ஒன்று.

உயிர்களுக்கெல்லாம் இன்பத்தை உதவுவது அவனது அருள். அவன் வேறு அவனது அருள்வேறு அன்று. என்றாலும் எண்ணத்தில் தானும் தன் அருளும் என இரண்டாயினான்.

உயிர்கட்கு அழியாத இன்பத்தை ஆக்கும் முறையில் உலக நுகர்ச்சியின் பொருட்டு மறைப்பாற்றலாகவும் பின்னர்ப் பேரின்ப நுகர்ச்சியின் பொருட்டு அருளாற்றலாகவும் விளங்கும் நிலையில் அவனது அருளும் இரண்டாயிற்று.

அவனது அருள்- இச்சை அறிவு செயல் என்னும் மூன்றாய் வெளிப்பட்டுச் செயல்பட நின்றது. அப்போது அம் மூன்றனுள்ளும் தானே நின்றான். உயிர்களுக்காகப் படைத்தல், காத்தல், அழித்தல்களையும் செய்தான்.. உயிர்களின் பொருட்டு அருவம், அருவுருவம், உருவம் என்ற மூவகையின் உள்ளும் நின்றும் அருள்புரிந்தான்.

இவ்வாறு இச்சை அறிவு செயல்களாகி நின்றவன் உயிர்கள் உய்யும் பொருட்டு நெறிகாட்ட எண்ணினான். அந்த எண்ணத்தில் அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும் நான்கு மறைகளையும் உயிர்களுக்காக உணர்த்தியருளினான்.

அப்படி உணர்த்த உணர்ந்தும் உயிர்கள் மெய் வாய் கண் மூக்கு செவி எனப்படும் ஐந்து பொறிகளின் வசத்தி

லிருந்தும் மீளமுடியாமல் தவித்தன. அப்போது அவ்வுயிர் களின் உடனாயிருந்து ஐம்பொறிகளின் வலிமையை அடக்கி நெறியில் நிற்கச் செய்தான் பெருமான்.

பொறியடக்கி நெறிநின்ற உயிர்களின் முயற்சிக் காலத்து மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்று சொல்லப்படும் ஆறு இடங் களிலும் அவன் பரவி நின்று அருள் செய்தான்.

ஆறு இடங்களுக்கும் அப்பாலாக ஆயிர இதழாய் மலர்ந்து விளங்கும் மேலிடத்திலும் விரைந்து சென்று விளங்கி யருளினான்.

இவ்வாறு கடந்த நிலையில் தன்னோடும் கலந்து நிற்கும் உயிர்களிடத்தில்- தன்வயத்தன் ஆதல், தூய உடம் பினன் ஆதல், இயற்கையாகவே பாசங்களின் நீங்கியமை, முற்றும் உணர்தல், இயற்கை உணர்வினன் ஆதல், பேரருள் உடைமை, அழிவில் ஆற்றல் உடைமை, வரம்பு இல் இன்பம் உடைமை என்னும் தன் எட்டுக் குணங்களும் விளங்குமாறு செய்து அங்கே நிலைத்திருக்கலானான்.

ஒன்று அவன் தானே; இரண்டுஅவன் இன் அருள்;
நின்றனன் மூன்றினுள்; நான்குஉணர்ந் தான்;ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான்இருந் தான்உணர்ந்து எட்டே.

2. இன்பம் பெறுவதற்கே உரிமை உடையவை உயிர்கள் எல்லாம். ஆதலால் அவை 'இன் உயிர்'. அவ் உயிர்களுக்கு அந்த இன்பத்தைக் கொடுக்க வேண்டும் என்பதே இறைவன் எண்ணம். அதற்காகவே அவன் உயிர்களைப் போக்கும் வர வும் ஆகிய இறத்தல் பிறத்தல்களுக்கு உள்ளாக்குகிறான். பிறந்த உயிர்களைக் காத்தலும் செய்கிறான்.

இப்படி மூன்று தொழில்களையும் உயிர்களுக்காகச் செய்யும் பொழுது அந்த உயிர்களோடும் கூடிநின்று செய்கிறான். அவன் இல்லையானால் அந்த உயிர்களும் இல்லை. அந்த முறையில் அவற்றின் இருப்பிற்குத் தானே முதலாக இருக்கின்றான். அவற்றொடும் கலந்து நிற்கின்றான். தான் வேறு உயிர் வேறு என்பது தெரியாதபடி அந்த உயிர்களேயாய் நிற்கின்றான்.

அதுவும் இன்றுதான் அன்றுதான் என்பது அல்லாமல் உயிர் என்று உளதோ அன்று முதலாகவே அவ் உயிர்களை விட்டு நீங்காமல் நிலைத்து நிற்கின்றவன் அவன்.

இப்படி உயிர்களோடு ஒன்றாகவும் உடனாகவும் இருந்தாலும், உயிர்களே ஆகி நின்றாலும் அவன் உயிராகமாட்டான். உயிர்கள் அவனாக மாட்டா. உயிர்கள் பாசம் என்னும் குற்றம் உடையன. அவனோ இயல்பாகவே அந்தக் குற்றம் இல்லாதவன். 'புனிதன்'. ஆதலால் அவன் உயிர்களுக்கு வேறாகவும் நிற்பவன்,

உயிர்கள் இறந்தும் பிறந்தும் இருந்தும் வருவதற்கு இடமாக நாலாபக்கமும் விரிந்து செல்லும் பேரண்டத்தைப் படைத்தான் இறைவன். நான்கு திசைகளிலும் அகன்று பரந்த உலகம் முழுமையிலும் நடைபெறும் செயல்கள் அத்தனைக்கும் தானே தலைவன் ஆனான்.

உயிர்களோடு அவையே ஆகியும். அவற்றின் உடனாகியும் தொழிற்படுத்தி வரும் இறைவன் அத்தனையும் ஆவதும் செய்வதும் அவனது அருளால். அந்த அருளும் அவனை விட்டுத் தனித்தது அன்று. அந்த அருளை விட்டு என்றுமே நீங்காது நின்றே மேற்கூறியவாறு செய்து வருபவன் அவன். அருள் என்பது அவன் செயலுக்கெல்லாம் துணையாய் நிற்பது.

ஆதலால் உலகத்துப் பெண்போல அவன் அருள். அந்த அருளையும் ஆள்பவன் அவன்.

அருளோடு கூடி இறைவன் செய்யும் செயல் எல்லாம் எதற்காக? உயிர்களுக்கு இன்பமாகிய நன்மையைச் செய்வதற்காகத்தானே? அந்த நன்மையை அவன் அருளால்தான் செய்கின்றான். உயிர்களுக்கு நன்மையைச் செய்வதே அவனது அருள் நன்மையைப் பெறும் உயிர்களோ நாலா திசையிலும் அகன்றிருக்கும் உலகம் முழுவதிலும் பரந்துள்ளன. அத்தனைக்கும் நன்மையைச் செய்யும் அருளை ஆளும் தலைவன் இறைவன்,

இங்குச் சொல்லியபடி செய்யும் செயல் அனைத்தும் உயிர்களின் நன்மையாகிய இன்பவாழ்விற்காகத்தானே? அந்த நன்மையை உயிர்கள் எந்த நிலைமையில் அடைகின்றன? மறுபடியும் பிறவாத நிலையில் அடைகின்றன. எப்படியானால் பிறவாத நிலை கைகூடும்? எல்லாரையும் போல எமன் வசப்பட்டு இறவாது போனால் மீண்டும் பிறவி இல்லையாகும். அப்படியானால் முதலில் இறப்பு அறவேண்டும். இறப்பு அற்றால் பிறப்பும் அறும். அப்படி இறப்பினை உயிர்களுக்கு நீக்குபவனும் இறைவனே.

கூற்றுவன் எமன். அவன் தென் திசை வேந்தன். அவனைப்போல நடுவு நிலைமையோடு இறைவன் ஆணையை நிறைவேற்றி வருபவர் யாரும் இல்லை எனலாம்.

யாருக்கு இறைவன் இறப்பினை அறுப்பான்? தம்மை மறந்து இறைவனையே எண்ணி இறைமயமாகவே ஆவார்க்கு இறப்பை அறுப்பான். இது வரலாற்றில் கண்ட உண்மை.

மார்க்கண்டேயர் சிவவழிபாட்டில் அப்படித் தம்மை

மறந்து சிவமாகவே ஒன்றியிருந்தார். அப்போது கடமையாற்ற வந்தான் கூற்றுவன். தன் அருளால், அதனை அவர் பால் தவிரச் செய்தான் சிவபெருமான்.

இன்பம் பெறுவதற்கு உரிமையுடைய உயிர்களுக்கு அதனை அளிப்பதற்காக அவையே ஆகியும் அவற்றின் உட னாகியும் நிலைபெற்று நின்றும் அவற்றின் வேறாகிய, குற் றம் இல்லாதவனை,

நாலா திசைகளிலும் உள்ள உயிர்களுக்கும் அங்கு நடக்கும் செயல்களுக்கும், அனைத்து உயிர்களுக்கும் இன்ப மாகிய நன்மையையே செய்துவரும் தனது அருளுக்கும் தலை வனை,

தன் அன்பராகிய அடியவர்க்கு இறப்பும் பிறப்பும் இல்லாதபடி செய்தவனை, என்றும் அடியவர்க்கு அவ்வாறு உடனடியாகச் செய்துவருபவனை,

என் உணர்வில் கொண்டு அவன் பெருமைகளை இங்கு நான் எடுத்துச் சொல்வேன்.

போற்றிசைத்து இன்உயிர் மன்னும் புனிதனை,
நாற்றிசைக் கும்நல்ல மாதுக்கு நாதனை,
மேல்திசைக் குள்தென் திசைக்குஒரு வேந்தனாம்
கூற்றுஉதைத் தானை-யான் கூறுகின் றேனே.

3. சிவபெருமான் உயிர்களோடு ஒத்து உடனாய் நின்ற பெருமான். நஞ்சினால் உண்டாக இருந்த சாவிலிருந்தும் தேவர்களைஅவன் காப்பாற்றினான். அப்படிக் காப்பாற்றப் பெற்ற தேவர்கள் எல்லாரும் ஒன்று கூடி, 'இவன் ஒருவனே

தானே விளங்கி நிற்கும் தயாபரன்' என்று புகழ்ந்து துதித்தார்கள். அவ்வாறு அவரால் துதிக்கப் பெற்ற உண்மையான தலைவன் அவன்.

எல்லா உயிர்க்கும் என்றும் அவனே சார்பாக இருப்பவன். அவனைச் சார்ந்தே இருந்தும் அவ் உயிர்களால் அவன் அறியப்படாதவன். பக்கத்தில் இருந்தும் அறியப் படாத அவ்வளவு உயர்ந்தவன் அவன்.

இப்படி உயிர்களின் உடனாயிருந்து பாதுகாத்து வரும் தலைவனுக்குப் பக்கமாயிருந்தும் அறிந்து கொள்ள முடியாதவனை, எப்படி நான் புகழ்ந்து துதித்துப் போற்றுவது? அதற்கு ஒரு வழி இருக்கிறது.

அவனுடன் நீங்காது நிற்பது அவனது அருள். அந்த அருளின் மூலமாகவே எனக்கு அனைத்தும் செய்து வருகிறான். ஆதலால் இப்போது நான் அவன் அருளினுள் புகுந்து கொள்வேன். எனது உணர்வு அவன் அருளுக்கு ஆளாகி நிற்கும். அப்போது அந்த அருளாலே அவனைக் காண்பேன் அவன் பெருமைகளைக் கண்டு உணர்வேன். உணர்ந்து அவனோடு ஒன்றி அவன் வழியில் நிற்பேன். அவன் அருள் வழியிலே அவன் பெருமைகளைப் புகழ்ந்து கூறுவேன்.

ஒக்கநின் றானை, உலப்புஇலி தேவர்கள்
'நக்கன்' என்று ஏத்திடும் நாதனை, நாள்தொறும்
பக்கம்நின் றார்அறி யாத பரமனைப்
புக்குநின்று உன்னி,யான் போற்றிசெய் வேனே.

4. விரிந்து பரந்து செல்லும் பேருலகம் முழுவதிலும் வாழ்ந்து வருவன உயிர்கள். உலகமோ நிலையற்றது.

ஆதலால் அவ் உயிர்களுக்கு அவ்வுலகம் என்றும் நிலையான சார்பு ஆகாது. உயிர்களுக்கு என்றும் நிலையான சார்புப் பொருளாக இருப்பவன் இறைவனே.

பேருலகத்தில் வாழ்வன உயிர்கள். உயிர்கள் அறிவு உடையன. உலகம் அறிவில்லாதது. அறிவில்லாத உலகத்திற்கு முதற்பொருளாக இருப்பது அறிவில்லாத 'மாயை' என்னும் பொருள். அந்த 'மாயை' தோன்றி விளங்கும் உலகிற்கு விதையாக இருப்பது. அதற்கு அறிவு இல்லாததால் தானே தொழிற்படாது. மாயை என்னும் அந்த முதற்பொருளைத் தாங்கி நிற்பது இறைவனது அருள். அந்த அருளை விட்டு நீங்காது நிற்பவன் பெருமான். அப்பெருமான் அருளாலேயே மாயையிலிருந்து உலகம் உண்டாயிற்று. இப்படி மாயையும் அருளும் சிவமும் ஒன்றுக்கு ஒன்று சார்பாக இருக்கும் தொடர்பால் இந்தப் பெரிய உலகத்திற்கு வித்தாகவும் இருப்பவன் இறைவன் எனலாம்.

எனக்காக உண்டாக்கிய உலகத்தில் என்னைப் பிறக்கச்செய்தான். இன்பத் துன்பங்களை நுகரச் செய்தான். ஆனாலும் இந்த உலகமே என்றும் எனக்கு நிலையான வாழ்விடம் ஆகாது. எனக்கு நிலையான வாழ்விடம் எனக்கு முதலாக இருக்கும் இறைவனும் அவனது அருளுமேயாகும். அதுவே எனக்குப் புகலிடம்,

அவன் அருளாகிய, திருவடியாகிய அந்தப் புகலிடத்தில் நான் சென்றடைய வேண்டும். அதுவும் என் முயற்சியாலேயே ஆகாது. அவனே தனது அருளால் என்னை அவ்வீடத்தில் சேர்க்க வேண்டும். அப்படித் தனது அருளால் என்னை அங்கு அடையச் செய்தவனும் அவனே.

அந்தப் புகலிடத்தே நான் அடைந்தும் இன்னும் இவ்வுலகத்திலேயே வாழ்ந்து வருகின்றேன். இவ்வுலக

வாழ்வு காலத்துக்கு உட்பட்டது. இங்குப் பகலுண்டு, இரவு உண்டு. காலத்துள்பட்ட இவ்வுலகத்து வாழும் காலமெல்லாம் இனி என்னைத் தன்பால் இணையச் செய்த பெருமானுக்கே ஆளாகி நின்றேன். எனக்கு என இங்குச் செயல் வேறு இல்லை. எல்லாச் செயல்களும் என்னை அடிமை கொண்ட அவன் செயல்களாகவே இருந்தன. அந்த நிலையில் என் செயலெல்லாம் அவன் செயலாகவே விளங்க நின்றேன்.

இப்படி அவனோடு ஒன்றி நின்று எல்லாம் அவன் செயலாகி நின்ற எனக்கு இவ்வுலகம் மாறுபட்டதாயிற்று இதுவரை இவ்வுலகமே பொருள் எனக் கருதினேன். அதனால் நானே நல்லது கெட்டது செய்தேன். இன்பத் துன்பங்களை நுகர்ந்து வந்தேன். இதற்கு அடிப்படைக் காரணமாக இருந்தது என்ன? எனது அறிவை விளங்கவொட்டாது செய்து வந்ததோர் பேரிருள் அது.

இப்போதோ நான் அவனோடும், அவன் அருளோடும் ஒன்றானேன். ஆதலால் இதுவரை இந்த மாறுபட்ட உலகத்தில் எனது அறிவை மறைத்து நின்று தொழிற்படுத்திய அந்தப் பேரிருளிலிருந்தும் நீங்கி நின்றேன். அதனால், என் செயலும் நீங்கினேன், இவ் உலகத்துத் தொடர்ப்பாடும் நீங்கினேன் ஆனேன்.

நிலையில்லாத இந்த அகன்ற பெரிய உலகத்து உள்ளார்க்கெல்லாம் என்றும் நிலையான சார்பாக உள்ளவனை, உலகத்தின் முதற்பொருளான மாயைக்கும் தன்னொடு நீங்காது நிற்கும் தனது அருளே இடமாக அமைந்துள்ள முறைமையால் உலகத்திற்கும் தானே முதலாக இருப்பவனை, எனக்கு என்றும் நிலையான வாழ்விடமாகிய தனது அடியாகிய திருவருளில் என்னை சாரச் செய்தவனை, எக்காலத்தும் இடையறாது வணங்கித் துதித்து- என்செயலெல்லாம் தன்

செயலாக்கிக் கொள்ள விடுத்து- அதன் பயனாக நிலைத்த அந்த ஒழுக்குக்கு மாறாக இவ் உலகத்து இன்பத் துன்ப வாழ்வுக்குக் காரணமாயிருந்து எனக்கு அறியாமையைச்செய்து வந்த ஆணவமல இருளிலிருந்தும் நீங்கி நின்றேன். [அது நீங்கவே அதன் தொடர்பான உலகக் கட்டும் வினைக்கட்டும் நீங்கியும் நின்றேன்.]

அகல்இடத்தார் மெய்யை, அண்டத்து வித்தைப்,
புகல்இடத் தேஎன்னைப் போதவிட் டானைப்-
பகலிடத் தும்இர வும்பணிந்து ஏத்தி,
இகல்இடத் தேஇருள் நீக்கிநின் றேனே.

5. இது வரை நான் சொல்லிவந்த பெருமான் சிவன் என்னும் பெருமானே. இந்தச் சிவபெருமானுக்கு ஒப்பான ஒரு தெய்வத்தை எங்கெங்குத் தேடினும் இல்லையாம். இவ் உலகத்திலும் அவனை ஒப்பார் எவரும் இலர்.

அதற்குக் காரணம் உள்ளது: பல மண்டிலங்களையும் கடந்து தன் கதிர் ஒளி வீசி விளங்கும் கதிரவனைப் போலப் பெருமான் சடைமுடி எனப்ப ம் பரந்து உயர்ந்து செல்லும் தன் அருட் சுடரால் அனைத்து உலகங்களையும் கடந்து நிற்பவன். தொன்மையாகவே அவ்வாறு கடந்து நிற்பவன் அனைத்துயிர்களின் நெஞ்சத்தாமரையிலும் / எனது நெஞ்சத் தாமரையிலும் வீற்றிருப்பவனும் ஆவான்.

தம்மைத் தாமே தலைவர் எனச் செருக்கிப் போரிட்ட அரியும் அயனுமாகிய இருவராலும் தேடியும் கண்டு கொள்ள முடியாதபடி அன்றொரு நாள் அளவில்லா ஒளியாகி உயர்ந்தும், அவர் செருக்கொழிந்து நின்ற போது அவர்தம் மலர்ந்த உள்ளத்தில் விளங்கியும் நின்ற பெருமான் அவன். ஆதலால் அவனுக்கு ஒப்பான ஒரு கடவுள் எங்குத் தேடினாலும் இல்லை. இவ் உலகத்தில் அவனை ஒப்பாரும் இலர்.

சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை.
அவனொடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை.
புவனம் கடந்துஅன்று பொன்ஒளி மின்னும்
தவனச் சடைமுடித் தாமரை யானே.

அவனைத் தவிர இறவாத தேவர் யாரும் இல்லை. அவனை அடைவதற்குச் செய்யும் தவமாகிய சரியை கிரியை யோகங்களை அல்லாமல் அருமையான தவம் வேறெதுவும் இல்லை. அத்தவமும் அவன் அருளுதவியால் அல்லாமல் செய்யப்படுவதும் இல்லை. அவனை இல்லாமல் நான்முகன் திருமால் உருத்திரன் ஆகிய மும்மூர்த்திகளாலும் படைத்தல் காத்தல் அழித்தல் தொழில்களைச் செய்யவும் முடியாது. ஆகவே, அவனை அவன் அருளை அல்லாமல் புகும் இடமாகிய வீடுபேற்றை அடைவதற்குரிய வழியும் எனக்குத் தெரியாது.

அவனை ஒழிய அமரரும் இல்லை
அவன்அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவன்அன்றி மூவரால் ஆவதுஒன்று இல்லை
அவன்அன்றி ஊர்புகும் ஆறுஅறியேனே.

மேற்கூறப்பட்ட அயன் முதலான மூவர்க்கும் முதல்வராக அவரோடு ஒத்த தொழில் முனைவராகச் சொல்லப்படும் மேலோராகிய அயன் முதல் மூவர்க்கும் முனைவன் ஆதலால் தனக்கு ஒப்பாக வேறு யாரையுமே இல்லாத முழு முதல்வன் அவன். அப்படி இருப்பினும் அவன் அன்போடு தன்னை 'அப்பா' என்று அழைப்பார்க்குத் தந்தையுமாகஇருந்து அருள்பவன். அவனே என் நெஞ்சத் தாமரையின் உள்ளே ஒளிவிட்டுக் கொண்டிருப்பவன்.

முன்னைஒப் பாய்உள்ள மூவர்க்கும் மூத்தவன்,
தன்னைஒப் பாய்ஒன்றும் இல்லாத் தலைமகன்,

தன்னை 'அப் பா!'எனில் அப்பனு மாய்உளன்,
பொன்னைஒப் பாகின்ற போதுஅகத் தானே.

8. தீயில் வெம்மையாகவும் நீரில் குளிர்ச்சியாகவும் உள்ளான். தீயில் வெம்மையும் நீரில் குளிர்ச்சியும் நீங்காது உடனாயிருப்பது போலத் தன்னைவிட்டு என்றும் நீங்கா திருக்கும் அருளோடு கூடி ஒன்றாயிருப்பான் அவன். அந்த அருளோ எல்லார் உணர்விலும் இருந்து வருகிறது. அப்படி இருந்தும் அந்த அருளையும் அதனோடு ஒன்றாயிருக்கும் பெருமானையும் யாரும் அறியாதிருக்கின்றனரே!

யாரும் தாமாக அறிந்துகொள்ள முடியாத அளவில் அவன் மிகத் தொலைவில் உள்ளவன் போல இருக்கின்றான். அப்படி யாரும் அறிய முடியாதபடி இருந்தாலும் யாவர்க்கும் நன்மையே செய்துகொண்டிருப்பவன். உண்மை நன்மை யாகிய பேரின்பப் பேற்றிற்குக் காரணமான பேரன்பு உடை யார்க்கு அவர் பக்கம் மிகநெருங்கிக் கலந்திருந்து அந்த இன்பத்தை அருளுவான்.

இவ்வாறு செய்வதால் உலகத்தவர்க்கு அருளுடைய தாய் எப்படியோ அத்தாயைக் காட்டிலும் சிறந்த இனிய அருளை உடையவன் அவன்.

அவனது அருள் முன் கூறியது போல மிக ஓங்கி உயர்ந்து சென்றாலும் நம் பக்கமாக இறங்கி நின்றருளும் இயல்பினையும் உடையவன்.

தீயினும் வெய்யன், புனலினும் தண்ணியன்,
ஆயினும் ஈசன் அருள்அறி வார்இல்லை-
சேயினும் நல்லன். அணியன்நல் அன்பர்க்குத்,
தாயினும் நல்லன்-தாழ்சடை யோனே.

9. அவனது அருளாகிய சடை அழகு உடையது. அது பொன்போன்று ஒளிவிடும் நிறத்தை உடையது. ஆதலால் அது பொன்னால் செய்யப்பட்ட அழகிய சடை என்று சொல்லும்படியானது. அந்தச் சடை பின்னிக்கிடத்தலால் விளங்குமாறு இருந்தான். அவனது பெயர் நந்தி என்று சொல்லுவர். அவன் என்னால் தொழப்படுபவன். ஆனாலும் அவன் எனக்கு மட்டும் அன்று. என்போன்ற எல்லார்க்கும் என் இனமான உயிர் அனைத்திற்கும் தலைவன். அதனால் எல்லா உயிர்களாலும் தொழத்தக்கவன். அவனே முழுமுதற் கடவுள். ஆதலால் தன்னால் தொழப்படுவார் யாரையும் இல்லாதவன் அவன். அப்படிப்பட்ட தனி முதல்வன் அவன்.

பொன்னால் புரிந்திட்ட பொற்சடை என்னப்
பின்னால் பிறங்க இருந்தவன். பேர்நந்தி.
என்னால் தொழப்படும் எம்இறை. மற்று, அவன்
தன்னால் தொழப்படு வார்இல்லை தானே.

10. தானே பெரிய இந்த நிலஉலகத்தைத் தாங்கிக் கொண்டு ஆகாயமாகி நிற்பான். தானே சுடும் இயல்பை உடைய தீ கதிரவன், திங்கள் ஆகிய மூன்று சுடராகவும் நிற்பான் தானே மழையைப் பெய்விக்கின்ற அருளாகவும் நிற்பான். தானே பெரிய மலையாகவும் குளிர்ந்த கடலாக வும் நிற்பான்.

இவ்வாறு, முழுமுதற் கடவுள் தானே இவ் உலகத்து எல்லாவற்றோடும் விரவி நின்று அவையே ஆகி நிற்பவன். தானே சார்பாகவும் சார்ந்திருக்கும் பொருளாகவும், வெப்ப மும் குளிர்ச்சியுமாகவும் உயர்ந்ததும் தாழ்ந்ததும் ஆகவும் இப்படி முரண்பட்ட இருவகையுமாக இருக்கின்றான்.

தானே இருநிலம் தாங்கிவிண் ணாய்நிற்கும்.
தானே சுடும்அங்கி, ஞாயிறும், திங்களும்.

தானே மழைபொழி தையலு மாய்நிற்கும்
தானே தடவரை, தண்கடல் ஆமே.

11. பக்கமாகவும் அதற்கு அப்பாலாகவும் எமக்கு முதலாக இருக்கும் பொருள் யாது என ஆராய்ந்து பார்த்தால், தன்னியல்பிலேயே முதற்பெரும் கடவுளாய் இருப்பது அந்த ஒரு பொருளே அல்லாமல் வேறு எதுவும் இல்லை. அப்பொருளை இன்றி எதுவும் இல்லை. ஆதலால், உயிர்கள் செய்யும் முயற்சியும் அம்முயற்சியின் முடிவான பயனும், மற்றும், அதுபோல, மழையும் அந்த மழையைக் கொடுக்கும் நீர்நிறைந்த மேகமும் எல்லாம் அந்த முதற்பொருளேயாம். நந்தி என்பதுவே அம்முதற்பெரும் கடவுட் பொருளுக்கு வழங்கும் பெயராகும்.

அயலும் புடையும்எம் ஆதியை நோக்கில்,
இயலும் பெரும்தெய்வம் யாதும் ஒன்று இல்லை.
முயலும், முயலின் முடிவும், மற்று; ஆங்கே
பெயலும், மழைமுகில் – பேர் நந்தி தானே.

12. (இச்சை செயல் அறிவு ஆகிய) மூன்று கண்களை உடையவனாகிய முதல்வன் உயிர்களிடத்துக் கொண்ட பேரன்பினோடும் நிலையாக இருக்கவும், வேறு வேறு கருதப்படும் எண்ணற்ற கடவுளர் எல்லாம் நிலையில்லாமல் அழிந்து போகவும், நிலவுலகத்து வாழ்வார் பலரும், வானுலகத்து வாழ்வார் பலரும் யாவர்க்கும் மேலாம் தலைவன் இந்த முக்கண்ணனாகிய பெருமானே என்பதனை அறியாதிருக்கின்றனரே!

கண்நுத லான்ஒரு காதலின் நிற்கவும்,
எண்இலி தேவர் இறந்தார் எனப்பலர்-
மண்உறு வார்களும், வான்உறு வார்களும்
அண்ணல் இவன்என்று அறியகி லார்களே!

13. மண்ணுலகத்தைத் தனது அடியால் அளந்துகண்ட திருமாலும், தாமரை மலர்மேல் வீற்றிருக்கும் நான்முகனும் முதலாகத் தேவர் பலரும் தம் அறிவின் எல்லை இவ்வளவு தான் என்பதனை உணர்ந்து யாவர்க்கும் மேலாம் இறைவனை நினையாதிருக்கின்றனர். வெளியாய் இருக்கும் இடத்திற்கெல்லாம் எல்லையாயிருப்பவனைத் தமது அறிவு கொண்டு அளந்துகண்டவர் எவரும் இலர். யாவற்றிற்கும் எவ்விடத்திற்கும் தானே எல்லையானதும் அல்லாமல் எல்லா இடத்தையும் கடந்து அப்பாலும் நின்றவன் அவனே.

மண்அளந் தான்,மல ரோன்முதல் தேவர்கள்
எண்அளந்து இன்னம் நினைக்கிலார் ஈசனை.
விண்அளந் தான்தன்னை மேல் அளந் தார் இல்லை.
கண்அளந்து எங்கும் கடந்துநின் றானே.

14. தாமரை மலரில் வீற்றிருக்கும் முதல்வனாகிய நான் முகன் தன்னால் படைக்கப்பட்ட இவ்வுலகத்தையெல்லாம் கடந்து பரந்து நின்றான். அவனது எல்லையையும் கடல் நிறம் கொண்ட கடவுளாகிய திருமால் கடந்து விரிந்து நின் றான். அந்த இருவர் எல்லைகளையும் ஊடுருவிச் சென்று அவற்றையும் கடந்து அப்பாலாக நின்றான் இறைவன். இப்படி எல்லாம் கடந்து அப்பாலாக நின்றவன் எல்லா விடத்தும் எல்லாம் அறிந்து ஆக்கமுறச் செய்து கொண்டும் இருக்கின்றான்.

(வேறு) நான்முகனாலும் திருமாலாலும் அறியமுடி யாதவன் இறைவன். அவன் எல்லாம் கடந்து நின்றாலும் அதே பொழுதில் எல்லா இடத்தும் எல்லாவற்றையும் தான் அறிந்து செயற்படுத்திக் கொண்டும் நிற்கின்றான்.

கடந்துநின் றான்கம லம்மலர் ஆதி.
கடந்துநின் றான்கடல் வண்ணன்எம் மாயன்.

கடந்துநின் றான் அவர்க்கு அப்புறம் ஈசன்.
கடந்துநின் றான்எங்கும் கண்டுநின் றானே.

15. எல்லாவற்றுக்கும் தானே முதலும் முடிவும் ஆகி- எல்லாவற்றையும் தோற்றுவிப்பவனும் ஒடுக்குபவனும் ஆகி- அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட உயிர்களின் உடம்புகளின் நடுவாக உடனாகி நின்று, அவ் உயிர்களைச் சிறிது சிறிதாக மல இருளை மாற்றித் தூய்மை செய்துவருபவனும் ஆகி இத்தன்மையால், எங்கும் பரந்து நிறைந்தும் இருப்பவன் ஆனான். இப்படிப்பட்ட இறைவன் தனது அருளே உயிர் களின் மலஇருள் நீக்கும் ஒளியாகவும் ஆயினான். அந்த அருள் ஒளியும் எல்லை இல்லாமல் விரிந்து நிற்கும் தன்மை யால் எல்லாவற்றையும் முறைப்பட நடத்துபவனும் ஆயினான். இப்படியெல்லாம் செய்துவருபவன் என்றும் நிலை யாய் உள்ள பொருளாகியிருந்தான்.

ஆதியு மாய்,அர னாய், உடல் உள்நின்ற
வேதியு மாய்விரிந்து ஆர்ந்திருந் தான்.அருள்
சோதியு மாய்ச்,சுருங் காததோர் தன்மையுள்
நீதியு மாய்நித்தம் ஆகிநின் றானே.

16. திருத்தமுற்று விளங்கும், கொன்றை மலர் மாலை அணிந்த சுருள் பொருந்திய சடையை உடைய. அழகு விளங்கும், ஒளி பொருந்திய நெற்றியை உடைய பெண்ணைப் பாகத்தில் கொண்ட இறைவனை, நீண்ட கால வாழ்வினை உடைய வானவரும், மற்றும் உள்ள தேவரும் குற்றங்களைக் குணமாகக் கொண்டாடி வருவது என்ன கருதியோ?

கோது குலாவிய கொன்றைக் குழல்சடை
மாது குலாவிய வாள்நுதல் பாகனை
யாது குலாவி அமரரும் தேவரும்
கோது குலாவிக் குணம்பயில் வாரே?

17. பெருங்காயத்தையும் கத்தூரியையும் ஒன்றாகக் கூட்டிக் கொதிக்க வைத்தாலும், யாவரும் வியப்ப, அங்குக் கத்தூரியின் மணமே மேலிட்டுத் தோன்றும். ஆதலால், வேறெந்த மணப் பொருளும் கத்தூரியாகிய மணப் பொருளுக்கு ஈடாகாது.

அதுபோலவே, உலகத்தார் பலரும் ஒன்று சேர்ந்து, மற்றைய தேவரோடும் முக்கண் பெருமானையும் ஒருவனாக வைத்துக் கருதினாலும், உயிர்களோடு அவன் என்றும் நிலையாகக் கொண்டுள்ள உறவுக்கு மற்றையோர் உறவு ஒப்பாகாது.

காயம் இரண்டும் கலந்து கொதிக்கினும்,
ஆயம்கத் தூரி அதுமிகும், அவ்வழி
தேசம் கலந்துஒரு தேவன்என்றும் எண்ணினும்,
ஈசன் உறவுக்கு எதிர்இல்லை தானே.

18. அளகாபுரிக்கு அரசனாகிய குபேரனை அவன் செய்த அருந்தவத்தை நினைத்து அந்த அளகாபுரிக்கு வேந்தனாக்கியதும் அல்லாமல் செல்வத்தின் தலைவனாகவும் ஆக்கினான் சிவபெருமான். அத்தகைய சிவனது முதன்மையைப் போற்றி உயிர்க்குச் சிறந்த செல்வமாகிய பேரின்பப் பெருஞ்செல்வத்தைப் பெறுவதற்கான முயற்சியை மேற்கொண்டால் எம் பெரியோனாகிய அவன் உடன் விரைந்து அவ் வீடுபேற்றினைக் கொடுத்தருள்வான்.

அதிபதி செய்து அளகை வேந்தனை
நிதிபதி செய்த நிறைதவம் நோக்கி
அதுபதி ஆதரித்து ஆக்கமது ஆக்கின்
இதுபதி கொள்என்ற எம்பெரு மானே.

19. இவ்வுலகத்து ஏலம் மணம் வீசும் சோலைகள் எனப் புகழப்படும் ஏழு தீவுகளையும் மிகவும் முற்பட்ட காலத்தேயே தோன்றச் செய்தவன். தொன்றே விளங்கிவரும் அறிவினை உடையவன். சாபத்தால் தேய்ந்து அழியும் நிலையிலான திங்களைத் தனது சடையில் அணிந்து நிலைபெறச் செய்தவன். அவனைக் கருதிச் செய்யும் உண்மைத் தவத்தை எண்ணி அத்தவமே தனக்கு இடமாக இருந்து அருளுகின்றான்.

இதுபதி ஏலம் கமழ்பொழில் ஏழும்
முதுபதி செய்தவன் மூதறி வாளன்.
விதுபதி செய்தவன் மெய்த்தவம் நோக்கி
அதுபதி யாக அமருகின் றானே.

20. அழிவையும் ஆக்கத்தையும் தொன்று தொட்டே செய்துவரும் முதல்வன் தங்கி விளங்கும் அறமுறை யாது என ஆராய்ந்து பார்த்தால் அது இடியும் முழக்கமுமாக இருக்கும் மேகத்தை ஒத்த அருள் நெறியாகும். அக்கடவுளின் உருவமோ மணமிக்க மலர்கள் பொருந்திய மலையை ஒத்த பெருவடிவாகும்.

(வேறு) ['அரனெறி' எனப் பாடம் கொண்டால்]

அழிவையும் ஆக்கத்தையும் தொன்று தொட்டே (அநாதியே) செய்துவரும் முதல்வன் குடிகொண்டிருக்கும் கோயில் எதுவென்றால் அது அருள்மழை பொழியும் இடியும் முழக்கமும் உடையதான மணம் வீசும் மலர்பொருந்திய, அந்த இறைவனைப் போலவே பெரிதாய் மாசற்றதாய் உயர்ந்து விளங்கும் திருக்கயிலை மலையாகும்.

முடிவும் பிறப்பையும் முன்னே படைத்த
அடிகள் உறையும் அரன்நெறி நாடில்

இடியும் முழக்கமும் ஈசர் உருவம்
கடிமலர்க் குன்றம் மலையது தானே.

21. வானத்துப் பெரிய மேகம் போன்ற நிறத்தவனாகிய திருமால், நான்முகன், வானவர் முதலான எல்லார்க்கும் உடம்பொடு கூடும் பிறப்பினை ஒழித்தருள்பவனாகிய முதல்வனை, ஒரே கடவுளை, காட்டு யானையைக் கதறச் செய்து அதன் தோலை உரித்த எம் தலைவனைப் புகழ்ந்து போற்றுங்கள். அதனால் அவனொடு ஒன்று சேரப் பெறுவீர்கள்.

வானப் பெருங்கொண்டல் மால், அயன், வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்த எம்
கோனைப் புகழுமின் கூடலும் ஆமே,

22. மனத்தின் இடமாகத் தோன்றுகின்றவர். அவன் எங்கு எப்படி மறைந்து நின்றான் என்பது அறியப்படாதவன். மனத்தில் நாம் நினைப்பதையெல்லாம் அங்கு மறைந்து நிற்கும் அவன் அறிவான். அந்த ' உண்மையை ஒவ்வொருவரும் எண்ணிப்பார்ப்பதில்லை. என்னிடம் அன்பு இல்லாதவனாயிருக்கிறான் என்று சொல்லுவர்.' இறைவனோ அப்படியல்லன். எல்லாரிடத்தும் அவன் அன்புடையவனே. ஆனாலும் குற்றங்களிலிருந்தும் நீங்கும் முயற்சியை உடையவர் பக்கமாகவே அவரைப் பேணி நிற்கின்றான்.

மனத்தில் எழுகின்ற மாயநல் நாடன்
நினைத்தது அறிவன் எனில்தான் நினைக்கிலர்,
எனக்குஇறை அன்புஇலன் என்பர். இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே.

23. கடவுள் எதுவும் செய்ய வல்லவன். அந்த முறையில் மிகப் பெரியதான கடலையே வடவை எனப்படும் தீக் கடவுள் வசத்தில் அடங்கிநிற்கச் செய்தவன். அப்படிப்பட்ட முறைமையை உடைய ஒருவன் இருக்கவே கடவுளே இல்லை என்று சொல்லலாமா? சொல்ல வேண்டாம். உலக மக்கள எண்ணும் கடவுளர் எல்லார்க்கும் முதல்வனான ஒரே கடவுள் அவன். அவனே இரவும் பகலும் எப்போதும் / உயிர்களின் அறியாமைக் காலத்தும் அறிவு விளங்கிய காலத்தும் முறையே மறைப்பாற்றலாகவும் அருளாற்றலாகவும் இருந்து, உதவிசெய்து வருகின்றான்.

(வேறு) வடவையாகிய தீக்கடவுளின் வசத்தில் நிற்க என்று மாபெருங் கடலையே அடங்கிநிற்கச் செய்தவன் எல்லாம் வல்ல கடவுள். அப்படி ஒருவன் இருக்கவே, கடவுள் இல்லை என்று சொல்லலாமா? சொல்ல வேண்டாம். உலக மக்கள் .... உதவி செய்துவருகின்றான்.

வல்லவன் வன்னிக்கு இறையிடை வாரணம்
நில்என நிற்பித்த நீதியுள் ஈசனை
இல் என வேண்டா! இறையவர் தம்முதல்.
அல்லும் பகலும் அருளுகின் றானே.

24. போற்றிப் பாடியும் புகழ்ந்துரைத்தும், இங்ஙனமாக, மாசு இல்லாதவனான ஒருவனது அடியெனப்படும் அருளையே தமக்கு முதலாக உறுதிகொள்ளுங்கள். நீண்ட காலமாக மயக்கத்திலே மிகுந்து நின்ற தம் சிந்தையை மாற்றி, உலக நுகர்ச்சியாகிய செல்வம் என்றைக்குமே திரு அருளுக்கே மாற்றப்பட்டது என்ற உணர்வில் நிலைபெறறவரின் செயலிலெல்லாம் அவ்அருளொடுகூடிய பெருமான் நிலைபெற்றுநின்றான்.

போற்றிசைத் தும்,புகழ்ந் தும்-புனிதன் அடி
தேற்றுமின்! என்றும் சிவன்அடிக் கேசெல்வம்
மாற்றியது என்று மயல்உற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே.

25. பிறப்பு இல்லாதவன், பின்னிக் கிடக்கும் அருட் சடையை உடையவன். எல்லையில்லாத அருளை உடையவன். இறப்பும் இல்லாதவன், எல்லார்க்குமே இன்பம் அருள்பவன். எப்பொருளிலும், யாவரிடத்தும் நீக்கம் இல்லாதவன், இப்படிப்பட்ட ஒரு கடவுளை வணங்குங்கள்! அவனை வணங்கினால் அறியாமைக்கு மாறான, மறத்தலுக்கு இல்லாத மெய்யறிவு உண்டாகும்.

பிறப்புஇலி, பிஞ்ஞகன், பேர்அரு ளாளன்
இறப்புஇலி, யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்புஇலி தன்னைத் தொழுமின்! தொழுதால்
மறப்புஇலி மாயா விருத்தமும் ஆமே.

26. நீங்கள் மறந்து விலகிச் சென்றாலும் தான் தொடர்ந்து உங்களோடும் நிலையாக இருந்துவருபவனை வணங்குங்கள். அவனை வணங்கினால், உலகம் எல்லாம் கடந்து வேறாகி நின்றவனும் உயிர்களின் நெஞ்சத் தாமரையின்மேல் கூடி உடனாகி நின்றவனும் ஆன இறைவனது திருவடிஞானம் கைகூடப் பெறுவீர். அவனை வணங்குவது சிவநல்வினையும் ஆகி மெய்யுணர்வைத் தோற்றுவிக்கும்.

தொடர்ந்துநின் றானைத் தொழுமின்! தொழுதால்
படர்ந்துநின் றான்,பரி பாரகம் முற்றும்
கடந்துநின் றான்,கம லம்மலர் மேலே
புணர்ந்திருந் தான்அடிப் புண்ணியம் ஆமே.

27. அந்திக் காலத்து வானம் என்று சொல்லும் படியான செந்நிறமான தாமரை மலர் போன்ற ஒளிபொருந் திய முகத்தை உடைய, பிற எல்லாவற்றையும் அழித்துத் தான் அழியாதுநிற்கும் கடவுளின் அருள் நமக்கே உரிய தாகும் என்ற துணிவோடு அவனை எந்நாளும் வணங்கப் பெறுபவரின் புத்தியின் உள்ளாக அப்பெருமான் உடனே தோன்றியருள்வான்.

சந்தி எனத்தக்க தாமரை வாள்முகத்து
அந்தம் இல் ஈசன் அருள் நமக் கேஎன்று
நந்தியை நாளும் வணங்கப் படும் அவர்
புந்தியின் உள்ளே புகுந்துநின் றானே.

28. எல்லாம் ஆகிநின்றான் என்னும் பொருளைக் கொண்ட பெயரை உடைய திருமால் வழிபட இசைந்து நின்றான் என்றாலும் தனக்கு ஒரு நன்மை கருதியே அது செய்தான் ஆதலால் இறைவன் அவனுக்கு உயர்கதிக்குத் துணையாகவில்லை.

உலகப்படைப்புக்கு முதலாகிநின்ற நான்முகன் ஒரு காலத்தில் ஐந்துதலைகள் இருந்த நிலை காரணமாகவும்,தான் வேதம் ஓதி என்ற காரணத்தாலும் இறைவனை வணங்க இசையாதிருந்தான். அதனால் அவனுக்கும் இறைவன் உயர் கதிக்குத் துணையாகவில்லை.

தேவர் தலைவனாகிய இந்திரனோ இறைவனைக் காண முடியாதபடியே வாடிநின்றான்.

இவர்க்கெல்லாம் அருளாத இறைவன் யாரே ஆனாலும் தன்முனைப்பு இல்லாமல் அவன் அருள்வழியிலே பொருந்தி நின்றார்க்கே அவர் செல்லும் உயர்கதிக்கு வழித் துணையாகி நிற்பான்.

இணங்கிநின் றான்எங்கும் ஆகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் ஆகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கிநின் றார்க்கே வழித்துணை ஆமே.

29. நெறிவிலகி நில்லாத குணம் சிறந்த அடியவர் மனத்தில் அவரது ஒழுக்கத்தை நெறிப்படுத்திப் பாதுகாத்து நிற்பவன் ஆகி அங்கேயே வீற்றிருந்தருளும் இறைவனே! அடியேனுக்கு உறவு ஆவார் உன்னை அல்லாமல் வேறு யார் உளர்? இவ்வுலகத்தில் உன்னையே பொருந்தி நிற்பதில் உலகவரை எண்ணி நாணிநிற்கவும் மாட்டேன். ஆதலால் நீ எனக்கு வெளிப்பட்டுநின்றருள்வாயாக!

காணநில் லாய்அடி யேற்குஉறவு ஆர்உளர்?
நாணநில் லேன்,உன்னை நான்தழு விக்கொளக்,
கோணநில் லாத குணத்துஅடி யார்மனத்து
ஆணியன் ஆகி அமர்ந்துநின் றானே!

30. மேகம் வானத்தில் நின்று முழங்குவதுபோல இறைவனும் அருள் முழக்கம் செய்து நம்மைத் தன்பால் இழுத்துக்கொள்ளமாட்டானா என்று சிலர் ஐயுற்று நிற்பார். கன்றைப்பிரிந்த பசு அக்கன்றை நினைத்துக் கதறி அழைப்பது போல இப்பொழுது நான் என் இறைவனை அவனது சிவஞானத்தைப்பெற விரும்பியே கதறிநின்று அழைப்பேன்.

வான்நின்று அழைக்கும் மழைபோல் இறைவனும்
தான்நின்று அழைக்குங்கொல் என்று தயங்குவார்.
ஆன்நின்று அழைக்கும் அதுபோல்,என் நந்தியை
நான்இன்று அழைப்பது ஞானம் கருதியே.

31. இறைவன் நிலவுலகத்து உள்ளான். வானிடத்தும் உள்ளான். விண்ணுலகத்தும் உள்ளான். வேதத்தின் உள்ளும் உள்ளான்—என்றெல்லாம் சொல்லுவது அனைத்தும் ஏற்றுக் கொள்ளத் தகும். அவன் அங்கெல்லாம் அப்படி இருப்பது பண்ணின் உள்ளே இனிய இசை கலந்து நிற்பது போல் ஆகும்.

இசையொடு பொருந்தப் பாடுதற்கு உரியவனாகிய அந்த இறைவன் எனது அறிவின் உள்ளும் இருக்கின்றமையால் அந்த அறிவின் உள்ளாக நிலையாக இருந்து அவனை அன்பு செய்தேன்.

மண்அகத் தான்ஒக்கும், வான்அகத் தான்ஒக்கும்,
விண்அகத் தான்ஒக்கும், வேதஅகத் தான்ஒக்கும்,
பண்அகத்து இன்இசை பாடல்உற் றானுக்கே
கண்அகத் தேநின்று காதலித் தேனே.

32. தேவர் தலைவன். நமக்கும் தலைவன். பத்துத் திசைகளிலும் பொருந்திய தலைவன். விரிவான நீராகிய கடலால் சூழப்பெற்ற ஏழுலகங்களிலும் பரந்து நின்ற தலைவன். அவனது உண்மை இயல்பினைத் தன் முயற்சி ஒன்றே கொண்டு அறிபவர் யாரும் இல்லை. எங்கும் பரவிநிற்கும் இத்தகைய தலைவன் அருளின் பெருமையை எம்மால் பாடவும் முடியுமோ!

தேவர் பிரான் நம் பிரான், திசை பத்தையும்
மேவு பிரான், விரி நீர்உலகு ஏழையும்
தாவு பிரான்தன்மை தான்அறி வார்இல்லை.
பாவு பிரான்அருள் பாடலும் ஆமே?

33. பழங்காலம் முதலே இவ் உலகிற்கு முழு முதல்

தலைவன் யார் என அறியாதவர் பலர் வேறு வேறாகப் பலருக்குத் தலைமை கருதினர். அதனால் நெறிகளும் பல வாகச் செய்தனர். அந்த நிலையில் இன்று வரை மெய்ப் பொருள் தன்மை ஒரு பொருளுக்கே என்பதுவும் உணராதவர் ஆனார். உண்மையை அடைவிக்கும் நெறியும் ஒன்றே என் பதுவும் அறியாதவர் ஆயினார். இஃது அறிவு நெறியில்.

அடுத்து அன்பு நெறியில் நிற்பாரும் பலரையும் கடவுளாகக் கருதிக் கொண்டு அவர் பலரையும் புகழ்ந்து போற்றுபவர் ஆனார். அன்பினால் புகழ்ந்து அவ்வாறு போற்றுபவரும் இறைவன் ஒருவனே என்பதனை உணர்வில் கொள்ளாமையால் தம் உள்ளத்தின் உள்ளே மகிழ்ச்சி யில்லாது இருக்கின்றனரே!

(என்று இவரெல்லாம் முதல்வன் ஒருவனையே உணர்ந்து அவனையே போற்றி இன்புறுவாரோ!)

பதிபல ஆயது பண்டுஇவ் உலகம்.
விதிபல செய்து,ஒன்று மெய்ம்மை உணரார்.
துதிபல தோத்திரம் சொல்லவல் லாரும்
மதிஇலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே!

34. சந்தனம் தான் மணம் உடையது ஆயினும் அதன் மணத்தைச் சிறந்து விளங்கச் செய்வது அத்துடன் கலக்கப் படும் மான் மதம் ஆகிய கத்தூரி.

அதுபோல உயிர்கள் தாம் அறிவுடையன ஆனாலும் அவற்றின் அறிவு சிவமாகிய ஒரே பரம்பொருளின் திருவருட் கலப்பினால் சிறந்துவிளங்கும். அவ்வாறு உயிர்கள் சிவக் கலப்பினால் சிறந்து விளங்குதற்கென அந்தச் சிவமாம் முதல்

வனே, மீண்டும் இங்கு வந்து பிறவா நிலையை அடைந்தோராகி உயர்ந்தோர்க்கு உணர்த்தியருளிய உண்மைநெறி ஒன்றேயாகும்.

கதிரவன் ஒருவனே ஆனாலும் உலகை நோக்கி விளக்கி நிற்கும் அவன் கதிர்களோ கணக்கற்றன. அது போலவே பரம்பொருள் சிவன் ஒருவனே ஆனாலும் உயிர்களை விளக்கி நிற்கும் அவன் அருள்நிலைகளோ பல. ஆதலால் அவற்றை உணர்த்திநிற்கும் அவன் திருப்பெயர்களும் பல ஆயின.

நான் புற உலகத்தோடு கூடிய காலத்தும் அவ்வாறு கூடாது அகத்தே ஒருங்கிய காலத்தும் எப்போதும் அவன் திருப்பெயர்கள் உணர்த்தும் அவனைப் பற்றிய பொருட் சிந்தனையொடும் அப்பெயர்களால் அவனைப் போற்றிப் புகழ்ந்து நிற்கின்றேன்.

சாந்து கமழும் கவரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க்கு அருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடர்அன்ன ஆயிரம் நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

35. பிறர் யாராலும் காட்ட முடியாது தானே காட்டிய அந்தச் சிவநெறியாய் நின்றருளும் முதல்வனையே போற்றுங்கள்! போற்றிப் புகழுங்கள்! அவ்வாறு அவனைப் போற்றிப் புகழ்ந்தால் மேற்கு, கிழக்கு முதலான எட்டுத் திசையில் உள்ளார் யாருக்கும் அவர் விரும்பிய வண்ணமே ஆகச் செய்தருள்வான். அவ்வாறே அவரெல்லாம் இவ்வுலகத்தில் இருக்கும் வரையும் அவர் செயல் எல்லாம் தன் செயலேயாகவும் செய்வான்.

ஆற்றுகி லாவழி ஆகும் இறைவனைப்
போற்றுமின்! போற்றிப் புகழ்மின்! புகழ்ந்திடில்,
மேல்திசைக் கும்கிழக் குத்திசை எட்டொடும்
ஆற்றுவன்; அப்படி ஆட்டவும் ஆமே.

36. மலநீக்கத்தின் பொருட்டு உலகத்தில் பிறக்குமாறு செய்தருளிய தந்தை போன்றவனை, அவ்வாறு பிறந்து உழலும் உயிர்களுக்கு மெய்யுணர்வு உண்டாகச் செய்து மாசு போக்கி மகிழச் செய்த ஆசிரியனை, மாசு நீங்கிய நிலையில் தமக்கு அருளிய அநத வள்ளலின் வள்ளன்மையை உணர்ந்து உருகிநிற்கும் உயிர்க்கு நுகர்ந்து முடியாத பேரின்பமாய் நின்று விளங்குபவனை, இவ்வகையிலெல்லாம் தனக்கு ஒப்பார் யாரையும் இல்லாத வள்ளலை, தோற்றிய அனைத்தையும் ஒன்றுவிடாமல் ஒடுக்கி நிற்கும் பேரூழிக் காலத்துத் தான் ஒருவனே ஒடுங்காமல் மீண்டும் தோற்றத்திற்குச் சார்பாக இருக்கும் (மகா சங்கார காரணன் ஆகிய) முதல்வனான அரனையே உமக்கு இயலும் எந்த வழியிலாயினும் துதித்துப் போற்றுங்கள். அவ்வாறு அவனைப் போற்றுவீரானால் அந்த முழுமுதற் கடவுளின் இனிய அருளால் சிவமாம் தன்மையைப் பெறலாம்

அப்பனை, நந்தியை, ஆரா அமுதினை,
ஒப்புஇலி வள்ளலை, ஊழி முதல்வனை,
எப்பரிசு ஆயினும் ஏத்துமின்! ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெறல் ஆமே.

37. குருவாய் வந்தருளிய பெருமானை நானும் நாள், தோறும் நிலையாயிருந்து ஏத்துவேன். தீயை ஒக்கும் திரு மேனியனாகிய அவனும் என்னிடத்தே நிலையாயிருந்தான். திங்கள் வானவெளியில் இருந்து கொண்டே தன் குளிர்ந்த கதிர்களால் உலகம்முழுவதும் பரவிநின்று மகிழ்விப்பது போல

இறைவனும் எனது நெஞ்சின் நடுவான பெருவெளியில் இருந்து கொண்டே உடல் முழுவதிலும் தன் அருளொளியால் பரந்து நின்று வாழ்வித்து வருகின்றான்.

நானும்நின்று ஏத்துவன் நாள்தொறும் நந்தியைத்
தானும்நின் றான்தழல் தான்ஒக்கும் மேனியன்
வானில்நின்று ஆர்மதி போல்உடல் உள்உவந்து
ஊனில்நின்று ஆங்கே உயிர்க்கின்ற வாறே.

38. பெரியவன், எளிதில் அடையக் கூடாதவன், பிறத்தல் இல்லாத அருளே உருவாக உடையவன், எமக்கெல்லாம் ஆசிரியனாக வந்தருளியவன், உயர்ந்த தவத்தாலே பெறக்கூடியவன்- இப்படிப்பட்ட இறைவனை நான் எனக்குத் தோன்றுமாறெல்லாம் இடையறாது சொல்லிப் போற்றுவேன்.

பிதற்றுஒழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றுஒழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றுஒழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றுஒழி யேன்பெரு மைத்தவன் நானே.

39. தன்னை வாழ்த்துவாரின் மனத்தின் உள்ளே மிகுந்து விளங்கும் பேரொளியை, அவரது மலமாசினைத் தீர்க்கும் அருள்நீரானை, அந்த அருள் நீரில் ஆடுவாரால் நன்றாகத் தோயப்படும் கடவுளை-ஏத்தியும் எம் பெரியோன் என்று உணர்ந்து வணங்கியும் நெருங்கிய அன்புகொண்டு ஒழுகினால் உறுதியாகவே அவனது அருளைப் பெறலாம். (இதில் சிறிதும் ஐயம் இல்லை.)

வாழ்த்தவல் லார்மனத்து உள்உறு சோதியைத்,
தீர்த்தனை, அங்கே திளைக்கின்ற தேவனை,
ஏத்தியும். எம்பெரு மான்என்று இறைஞ்சியும்-
ஆத்தம்செய்து ஈசன் அருள்பெறல் ஆமே.

40. தம் குறைபாட்டை உணர்ந்தவராகி இறைவனை அடைந்து, எங்கும் எண்ணியதை முடித்தருளும் தன்மையை விளக்கி நிற்கும் அவனது திருவருளையே புகலிடமாகக் கொண்டு பொருந்துங்கள்.

அவன் எங்கும் நிறைந்து பொருந்தும் சிவந்த மாசற்ற பொன்போன்ற ஒளிவண்ணமானவன். அவனுக்குத் தம்மைக் காட்டிக் கொள்ள மறுத்துப் பிடிவாதம் செய்யாமல் தம் குறையைக் காட்டி நின்று (தன் முனைப்பு அடங்கி நின்று) வாழ்த்தும் வலிமையை உடையவர்க்கு. அவன், அவர்க்கு வேறான பாசக் கூட்டத்தையெல்லாம் செயல் அறச்செய்ய எண்ணுவான். அதற்காக அவன் உடனே நெருங்கி வருவான், செயலறச் செய்வான். அதுமட்டும் அன்று. அப்பாசக் கூட்டம் மீண்டும் எப்போதாயினும் அவரைப் பற்றாதபடி அவர் பக்கமே நிலையாக விளங்கிய வண்ணமாக இருப்பான்.

குறைந்துஅடைந்து ஈசன் குரைகழல் நாடும்!
நிறைந்துஅடை செம்பொனின் நேர்ஒளி ஒக்கும்.
மறைஞ்சுஅடம் செய்யாது வாழ்த்தவல் லார்க்குப்
புறம்சடம் செய்வான் புகுந்துநின் றானே.

41. பாற்கடலில் இருந்து சீற்றம் கொண்டு எழுந்த நஞ்சினை உண்டு தேவரைப் பாதுகாத்த மாதேவனை, இது வரை காமம் முதலாயின அடர்ந்து கிடந்த நெஞ்சத்தின் நடுவில் போற்றுதலைச் செய்பவர்க்கு, மேகத்தின் இடையே உண்டான மின்னலைப் போல ஒளிவிடும் நெற்றியை உடைய உமையை ஒரு பாகத்தில் கொண்ட அவ் இறைவனும் அவ்விடத்தில் இனத்தோடு கூடிச் சேர்ந்த மானைப் போல விரைந்து உயிரோடு கலந்து நிற்பான்.

சினம்செய்த நஞ்சுஉண்ட தேவர் பிரானைப்
புனம்செய்த நெஞ்சிடைப் போற்றவல் லார்க்குக்
கனம்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனம்செய்த மான்போல் இணங்கிநின் றானே.

42. நான்முகக் கடவுள் படைத்த இவ் உலகம் தருவன மாயாகாரியம் ஆன போகங்கள், இவற்றையே மீண்டும் மீண்டும் நுகர்ந்து வருகின்றனர் உலகத்து மக்கள். அப்படி நுகர்ந்து வந்தாலும் அப் போகங்களையே எண்ணும் எண்ணத்திலிருந்து அப்பால் நுழைந்து சென்று, அவற்றை ஒடுக்கவல்லவனாகிய முதல்வனையே அங்கு நினைந்து புகழ் வாராக இருந்தால் அவர் பெறுவது-மூங்கிலை ஒத்ததோளை உடைய உமையின் மணாளன் ஆகிய முழுமுதற் கடவுள் ஒரு வனையே அடையும் பேறு ஆகும்.

போய்,அரன் தன்னைப் புகழ்வார் பெறுவ்து-
நாயகன் நான்முடி செய்தது வேநல்கும்
மாயகம் சூழ்ந்து வரவல்லர் ஆகிலும்
வேய்அன தோளிக்கு வேந்துஒன்றும் தானே.

43. பாசத்தை அழிக்க வல்லவன் அரன். அவன் திரு வருளையே புகழ்ந்து, அன்பால் புலம்பி அழவேண்டும். அப் பெருமான் அருளையே தம் சிந்தையில் ஆராய்ந்து அறிதல் வேண்டும். அந்த அருளே தாமாகப் பாவனை உண்டாக, நாள்தோறும், எப்போதும் இறைவன் ஞானத்தையே தம் அறிவுக்கு முதலாக வைத்து அந்த ஞானத்திலே பொருந்தும் முயற்சி உடையராகவேண்டும். இப்படிச் செய்வார்க்கு உடனே முதல்வன் தன்னையே முதலாகக் கொடுத்து அவர் உயிர் முழுவதிலும் நீங்காது நிறைந்து நிற்பான்.

அரன்அடி சொல்லி, அரற்றி, அழுது,
பரன்அடி நாடியே பாவிப்ப, நாளும்
உரன்அடி செய்துஅங்கு ஒதுங்கவல் லார்க்கு
நிரன்அடி செய்து நிறைந்துநின் றானே.

44. இயல்பாகவே மலமாசு இல்லாத இறைவன் அடியாகிய திருவருளைத் தேவரும் அசுரரும் மக்களும் போற்றி போற்றி என்பார். நான் அவன் அருளை என் அன்பின் உள்ளே போற்றி விளங்கக் கொண்டேன்.

போற்றி!என் பார்அம ரர்,புனி தன்அடி,
போற்றிஎன்! பார்அசு ரர்,புனி தன்அடி,
போற்றி!என் பார்மனி தர்,புனி தன்அடி,
போற்றி!என் அன்புள் பொலியவைத் தேனே.

45. கடலால் சூழப்பட்ட இவ் உலக இயக்கம் இறைவன் ஆணைவழி அல்லது இல்லை. நாம் நுகர்ந்துவரும் உலக இன்பங்களும் அவன் ஆணைவழியே. இதனின் வேறு இல்லை. ஆதலால் நாள்தோறும் நாம் அவனைத் துதிக்கின்ற துதியின் வழியே பேரொளியாகிய ஞானத் தலைவன் நம்மைத் தன்னை அடைவிக்கும் உண்மையான வழியைக் காட்டிச் செலுத்தும் ஞானக் கதிரவன் ஆவான்.

விதிவழி அல்லதுஇவ் வேலை உலகம்.
விதிவழி இன்பம், விருத்தமும் இல்லை.
துதிவழி நித்தலும் சோதிப் பிரானும்
பதிவழி காட்டும் பகலவன் ஆமே.

46. 'செந்நிறத்தவனே!- தோற்றிய அனைத்தையும் ஒடுக்குபவனே! எம் பாசம் முழுவதையும் கெடுப்பவனே!

பேரின்ப உருவே!' -என்றெல்லாம் சொல்லி இவ்வாறெல்லாம் இருக்கும் அவன் சிறப்பினைத் தம் உணர்வில் கொண்ட வராய், பொய்விட்டு அகன்ற மெய்யடியாரெல்லாம் தொழுது நிற்க, யாம், 'தொன்மையனே! முதல்வனே! உயர்ந்தோனே!' என்று சொல்லித் துதித்த அளவிலே, ஞானமயன் ஆன அவன் என் மனத்துள் வந்து புகுந்துநின்றான்.

அந்திவண் ணா! அர னே! சிவ னே!என்று
சிந்தைசெய் வண்ணம் திருந்துஅடி யார்தொழ
முந்திவண் ணா!முதல் வா!பர னே!என்று
புந்திவண் ணன்எம் மனம்புகுந் தானே.

47. இல்லறத்தில் இருந்து கொண்டே உன்னை அடைய முயன்றவர் பெரிதான தவத்தைச் செய்தவரைப் போல்வார். உன்னை இடையறாமல் நினைந்திருந்தவர் உன்னிடம் மிகுந்த அன்புடையர் ஆவார். பனைமரத்தில் இருக்கும் பருந்து வானத்தில் தனக்கு இரைகருதி எழுந்து எங்கெங்குச் சுற்றினாலும் வந்துவந்து தான்தங்குவது அப் பனையினிடமே. அது போலவே யாம் உலக வாழ்வில் இன்பம் தேடி எங்கெங்குச் சுற்றித் திரியினும் அமைதி பெறும் இடம் நீயே என்ற உண்மையை உணராதவர்க்கு உன் னிடத்துப் பெறும் பேரின்பப் பேறும் இல்லையாகும்.

மனையுள் இருந்தவர் மாதவர் ஒப்பர்.
நினைவுள் இருந்தவர் நேசத்துள் நிற்பர்.
பனையுள் இருந்த பருந்தது போல
நினையா தவர்க்குஇல்லை நின்இன்பம் தானே.

48. அடியவர் துதிக்கும் தேவர் தலைவனைத் தலை யால் வணங்கி-முனைப்பு அடங்கி-நின்று, முதல்வனாகிய அவனையே கருத்தில் கொண்டு, உலகத்து வாழ்வாரை

அருள் செய்து வருகின்ற மேலவர்க்கும் மேலாகி நின்றான் தன்னை, எமக்கெல்லாம் தந்தை போல்வானை – அணையாமல் நிலையாக நின்று ஒளிவிடும் பேரறிவாகிய விளக்கு என்று எனது உணர்வில் பொருந்திநின்றேன்.

அடியார் பரவும் அமரர் பிரானை,
முடியால் வணங்கி, முதல்வனை முன்னிப்,
படியார் அருளும் பரம்பரன் எந்தை
விடியா விளக்குஎன்று மேவிநின் றேனே.

49. உயர்ந்ததான அருளுக்கும் அவ் அருள்வழி இயங்கும் உயிர்கட்கும், அவ் உயிர்களைக் கட்டிநிற்கும் பாசங்கட்கும் முழு முதலாயிருந்து இயக்கிவருபவன் இறைவன். அவனை நினைந்து, சொல்லப்பட்ட உயிரறிவு பாச அறிவுச் செயல் எல்லாம் ஒன்றி ஒடுங்கி நிற்பார்க்குத் தம் உயிர்க்கு உண்டான துன்ப அலை மோதும் பிறவிப் பெருங்கடலை நீந்தி, பசுத்தன்மை அதற்குக் காரணமான பாசக்கட்டு எல்லாம் கடந்து அருள்துறையை அடைதல் எளிதாகும்.

பரை பசு, பாசத்து நாதனை உள்ளி,
உரைபசு, பாசத்து ஒருங்கவல் லார்க்குத்
திரைபசு பாவச் செழுங்கடல் நீந்திக்
கரைபசு பாசம் கடந்துஎய்தல் ஆமே.

50. முதல்வன் திருவடிமலரை தலை மேல் அணிந்து கொள்வேன். நெஞ்சின் நடுவாக வைத்துக் கொள்வேன். எம் பெருமான், பெருமான் என்று பாடுவேன். பலவகை மலர்களையும் அவன் திருவடியில் தூவுவேன். தூவிப் பணிந்து நிற்பேன். ஆராத இன்ப அனுபவத்தில் திளைத்து ஆடுவேன். ஆடி, 'இவன் தேவர் தலைவன்' என்று கூறி அவனையே எனக்கு உரித்தாகப் பெற விரும்புவேன். இப்பொழுது நான் அறிவது இந்த நிலை ஒன்றே.

சூடுவன்; நெஞ்சிடை வைப்பன்; பிரான்என்று
பாடுவன், பன்மலர் தூவிப் பணிந்துநின்று
ஆடுவன்; ஆடி, அமரர்பி ரான்என்று
நாடுவன், நான்இன்று அறிவது தானே.

திருமந்திர நூலின் பெருமை

—O—

திருமந் திரமே சிவகதிக்கு வித்தாம்,
திருமந் திரமே சிவமாம், - அருமந்த
புந்திக்கு ளேநினைந்து போற்றும்அடி யார்தமக்குச்
சந்திக்கும் தற்பரமே தான்.

திருமூல தேவனையே சிந்தைசெய் வார்க்குக்
கருமூலம் இல்லையே காண்.

திருமூல தேவர் திருவடி வாழ்க!